[1989 ஏப்ரல் 4

(ஈ) தெலுங்கு வருடப் பிறப்பு விடுமுறை நாள் குறித்து.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, தெலுங்கு வருடப் பிறப்பு ஏப்ரல் மாதம் 7 ஆம் தேதி என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அரசாங்கத்தினுடைய அறிவிப்பின்படி 6 ஆம் தேதி என்று இருக்கிறது. ஆதலால் அந்தப் பண்டிகையைக் கொண்டாடுகின்ற மக்களுக்குப் பல அசௌகரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவரவர்களே, காலண்டரிலே வருகிற தெலுங்கு வருஷப் பிறப்பு வருகிறதே தவிர வேறு மாதிரி வருவது எங்களுக்குத் தெரியாது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர திட்சிதர் : தலைவரவர்களே,......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே இசைவு பெற்றவர்களுக்கு நான் இசைவு கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) சரி ஐயா, திரு. வெங்கடேஸ்வர தீட்சிதருக்கு ஒரு சிறப்பு விதிவிலக்கு.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : 6 ஆம் தேதியா, 7 ஆம் தேதியா என்று நிர்ணயிக்காமல் போய்க் கொண்டே இருக்கிறது. 6 ஆம் தேதி லீவ் விடப்பட்டிருக்கிறது. அவர் 7 ஆம் தேதி என்று சொல்கிறார். அதில் எது என்று சொல்லட்டுமே. அதற்கு நாங்களும் பதில் சொல்ல வேண்டும் அல்லவா? 6 ஆம் தேதி விடுகிறீர்களா அல்லது 7 ஆம் தேதியும் சேர்த்து லீவ் விடுகிறீர்களா? அதைக் கவனிக்க வேண்டாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு 6 விடுமுறை. (குறுக்கீடு). உங்களுக்கு 7 அலுவலகம். (குறுக்கீடு) அவருக்கு நான் விடை சொல்லியிருக்கிறேன்.

(உ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மக்களுடைய பிரச்சினைகளை அதிலும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளையெல்லாம் நாங்கள் பலரும் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் மூலமாகக் கொடுத்திருக்கிறோம். என்னிடத்திலே நேற்றைக்கு நான் கொடுத்த மூன்று கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்று எந்த விதக் காரணமும் சுட்டப்படாமல் கடிதம் வந்திருக்கிறது. இன்று முதல் நாள் ஒன்றுக்கு இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளலாம்.